**அரசாங்க வருமான முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டம் (கடன் இல. 2624 எஸ்ஆர்ஜ) - 2013**

---

நிதித் திட்ட முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜீஓஎஸ்எல் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 யூன் 07 ஆம் திகதிய 2624 எஸ்ஆர்ஜ ஆம் இலக்கக் கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு ஆசிய யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

நிதித்திட்ட முகாமைத்துவ வினைத்திறன் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, நிதி திட்டமிடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலுக்குப் பொறுப்பானதாகும். அரச நிதி முகாமைத்துவ நடைமுறையில் கடன் பெறுனரின் நிதித் திட்ட கடன் மற்றும் வினைத்திறனை விரிவுபடுத்துதல் செற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 7,920 மில்லியனிற்குச் சமனாக ஐ.அ.டொலர் 60 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 6,600 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 50 மில்லியனை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்திடமிருந்து ரூபா 1,320 மில்லியன் வழங்கப்படவேண்டும். அதற்கு மேலாக, ரூபா 264 மில்லியனிற்குசமனான ஐ.அ.டொலர் 2 மில்லியன் மானியத்தை செயற்திட்டத்தின் அமுலாக்கலின்போது தொழில்நுட்ப உதவியாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டத்தின் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் ஆக்கக்கூறு பின்னர் இரத்துச் செய்யப்படடதுடன் கடனின் உடன்பட்ட தொகை ஐ.அ.டொலர் 30.8 மில்லியனாகத் திருத்தப்பட்டிருந்தது. செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2010 மே 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 ஒக்தோபர் 31 அளவில்பூர்த்தி செய்யப்படவேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டது. மேலும் கடன் வசதியின் காலப்பகுதி 2016 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் மானிய வசதி 2014 ஒக்தோபர் 31 இல் மூடப்படுமென பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

---

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள்

பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க கடன் மற்றும் மானியத்தின் கீழாக பற்றுதல்கள் இருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) கட்டு நிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரம்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகச் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டு நிதியம் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரம்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளின் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கிக் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது அவை கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 526,379,817 தொகையாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 725,480,204 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| **நிலையான சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகாரணங்கள் | 176,331 | 3,666,468 | 27,115,895 |
| **அபிவிருத்தி செலவினம்** | | | |
| செயலமர்வுகள் வெளிவாரி பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் | 223,691,168 | 9,410,335 | 325,471,389 |
| டிஜிடல் நிலையம் | 8,201,068 | - | 8,201,068 |
| ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை | 265,419,095 | - | 265,419,095 |
| **தொழிற்பாட்டு செலவினம்** | | | |
| பதவியணியினர் வேதனங்கள் | 14,570,211 | 16,075,929 | 50,323,140 |
| போக்குவரத்துக் கிரயம் | 19,474 | 40,369 | 121,538 |
| தொடர்பாடல் | 972,208 | 1,060,550 | 3,932,192 |
| அலுவலக செலவினம் | 4,021,499 | 4,669,347 | 14,078,013 |
| குத்தகை சொத்துக்களின் வட்டி | 434,199 | 434,199 | 1,085,497 |
| நானாவிதம் | 395,578 | 279,493 | 1,057,845 |
| வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் | 8,478,986 | 10,662,288 | 28,674,532 |
| | 526,379,817 | 46,298,978 | 725,480,204 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் அந்தக் கணக்கிலுள்ள 2013 திசெம்பர் 31 இல் உள்ளவற்றை மீதி என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 634,059 | 80,627,491 |
| கூட்டு : பெறுவனவுகள் | 815,826 | 108,230,551 |
| | 1,449,885 | 188,858,042 |
| கழி : பற்றுதல்கள் | 1,040,327 | 134,629,647 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | - | 677,425 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 409,558 | 53,550,970 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் அதற்காக செய்யப்பட்ட ரூபா 152,576,630 தொகை என்பன தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 27,115,895 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பௌதீக உள்ள தன்மையை நிலையான சொத்துக்களின் பதிவேடுகள் மற்றும் ஆண்டு கணிப்புச்சபை அறிக்கைகள் என்பன இன்மையால் கணக்காய்வினை சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை.

### 5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பகுதிநேர அடிப்படையில் செயற்திட்டத்தில் சேவை புரிந்த நிதி முகாமையாளரிடமிருந்து உழைக்கும் போதே செலுத்தப்படும் வரி கழிக்கப்பட்டு 2011 ஏப்ரல் 18 ஆம் திகதிய பீஏவைஈ/வரி/01/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தால் பணிக்கப்பட்டவாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் 03 அலுவலர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை விஞ்சிய 2009 ஏப்ரல் 29 இல் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு மாறாக ஒவ்வொரு மாதத்திற்கும் ரூபா 42,500 கூட்டுமொத்தத் தொகையான சம்பளங்களை எடுத்திருந்தனர்.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டில் பயன்படுத்திய நிதிகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவை தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையின்படி நிதியளிக்க உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்ட தொகை | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக பயன்படுத்திய தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ மில்லி | ரூபா மில்லி | ரூபா மில்லி | ஐ.அ.டெ மில்லி | ரூபா மில்லி | ஐ.அ.டொ மில்லி | ரூபா மில்லி |
| ஏடிபீ கடன் | 30.8 | 4,065 | 1.0 | 3.42 | 452 | 4.4 | 578 |
| மானியம் | 2.0 | 264 | - | - | - | - | - |
| ஜீஓஎஸ்எல் | 10.0 | 1,320 | 0.1 | 0.56 | 74 | 1.1 | 147 |
| | 42.8 | 5,649 | 1.1 | 3.99 | 526 | 5.5 | 725 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் உடன்படிக்கையின் படி ரூபா 4,065 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 30.8 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டிருந்தது. எனினும் ரூபா 578 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 4.4 மில்லியன் அல்லது 13 சதவீதம் மட்டுமே செயற்திட்டத்தால் முதலாவது மூன்று ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளிற்கான தொழில்நுட்ப உதவி வழங்குவதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 264 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 2 மில்லியன் மானியம் 2014 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறும் கூட பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் ஒவ்வொரு ஆக்கக்கூறிற்குமாக ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்படுத்திய நிதிகள் என்பன தொடர்பான விபரங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| **விடயம்** | **ஏடிபீ ஆல் மேற்கொள்ளப்பட்ட மொத்த ஒதுக்கீடு** | **மொத்த ஒதுக்கீடு சதவீதமாக ஒதுக்கீடு** | **2013 திசெம்பர் 31 வரையான மொத்த பயன்பாடு** | **ஒதுக்கீடின் சதவீதமான நிதிகளின் பயன்பாடு** |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **%** | **ரூபா மில்லியன்** | **%** |
| ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை | 2,380 | 59 | 232 | 9.7 |
| உபகரணங்களின் கொள்வனவு | 490 | 12 | 8 | 1.6 |
| ஆலோசணை சேவைகள் | 477 | 12 | 134 | 28.0 |
| செயலமர்வுகள் வெளிவாரி பயிற்சிகள் மற்றும் மகாநாடுகள் | 322 | 8 | 175 | 54.3 |
| வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் | 91 | 2 | 29 | 319 |
| ஒதுக்கீடு செய்யப்படாதவை | 305 | 7 | - | - |
| | 4,065 | 100 | 578 | 14.7 |

மேற்படி தகவல்களின்படி, ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் அதற்கான உபகரணங்களின் கொள்வனவு என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் திருப்திகரமான முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமைக்கான அக்கறை வெளிப்படுத்தல் 2011 மே மாதத்தில் கோரப்பட்டிருந்ததுடன் பொருத்தமான வழங்குனரை தெரிவுசெய்யும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகள் காலம் கடந்தபின்னரே 2013 ஒகஸ்த்து மாதத்தில் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.